**புத்தளம் பிரதேச சபை - 2024**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தளம் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் புத்தளம் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமா்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் புத்தளம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 477,915 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மூலதனப் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக நிதி நிலைமைக் கூற்றில் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தை எடுக்கின்ற பொறுப்புக்கள் நடைமுறை அல்லாப் பொறுப்பாக ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு ஏற்படுகின்ற பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்பாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காக 2025 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய ரூபா 3,000,000 கடன் தவணைப் பணம் நடைமுறையல்லாப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிக்கும், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளுக்கும் இடையே ரூபா 1,458,634 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் கணக்கீடு செய்யும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகள் மற்றும் பட்டோலைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் சரி செய்யப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 104(3), 104(4) | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட டெக்டர் வண்டி 2024 மார்ச் 14 திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தி நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | டெக்டர் வண்டி வாகனத் தளத்தில் நிறுத்தி வைத்திருக்கும் போது பகல் நேரத்தில் வெயிலின் வெப்பம் அதிகரித்ததன் அடிப்படையில் கதவு கண்ணாடி வெடித்து சென்றமையால் பொலிசில் முறைப்பாடு செய்து பழுத பார்ப்பதற்காக காப்புறுதிக் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வைப்புக்களில் 75 சதவீதம் அளவு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கும், வைப்பாளர்களுக்கு விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து குறைக்கப்பட்டுள்ளது. மிகுதி வைப்புக்களுக்காக உரிய வைப்பாளர்களுக்கு இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 61,818,544 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,731,640 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 11,357 | 15,975 | 9,930 | 9,349 | 3,736 | 3,150 | 2,254 | 2,582 |
| ii. | வாடகை | 21,553 | 19,306 | 9,706 | 11,625 | 18,800 | 18,016 | 13,348 | 9,494 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,907 | 1,107 | 1,695 | - | 2,855 | 1,997 | 1,997 | - |
| iv. | ஏனைய வருமானம் | 8,365 | 8,801 | 8,801 | - | 9,400 | 6,099 | 6,099 | - |
| | மொத்தம் | 44,182 | 45,189 | 30,132 | 20,974 | 34,791 | 29,262 | 23,698 | 12,076 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 8,460,503 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலமாக நிலுவையாக இருந்த மீதி ரூபா 8,413,100 உம், 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 47,403 உம் ஆகும். | இந்த நிலுவையில் ரூபா 1,202,478 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் நடமாடும் நிகழ்சித் திட்டங்களின் மூலமும், ஆதனங்களைச் தடை செய்வதன் மூலமும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரித் தொகை ரூபா 879,861 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 378,013 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதியும், ரூபா 510,848 தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் உள்ள நிலுவை மீதியும் ஆகும். | ஏக்கர் வரி ஆய்வினை மேற்கொண்டு சில காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் நிலுவை பணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டு அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 10,255,725 ஆக இருந்ததுடன் அந்த தொகை 01 இற்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவை மீதி ஆகும். | நிலுவைப் பணத்தை அறவிடுதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 11 கணக்குகளின் பெறுமதி ரூபா 26,387,537 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 20,840,518 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியாகும். இந்த நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. | நிலுவை மீதியில் ரூபா 8,412,377 தொகை பெறப்பட்டுள்ளதுடன் பழைய நிலுவை மீதி தொடர்பான தகவல்களை கண்டறிந்த பின்னர் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 07 கணக்குகளின் பெறுமதி ரூபா 2,238,105 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்தை விஞ்சிய ரூபா 278,714 மீதி ஆகும். இந்த செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பினை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 2,945,502 தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய கொடுப்பனவுகளுக்கான தகவல்களைப் பெற்று செலுத்தக் கூடிய பணத்தை செலுத்துவதற்கும் முன்வராதவர்களின் பணம், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சபை நிதியத்தில் செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதுரங்குளி தொடுவாவ வீதியில் அமைந்துள்ள 17 கடைகளுக்காக 2022 ஏப்ரல் முதல் கடை வாடகை செலுத்தாமல் உடன்படிக்கை புதுப்பிக்காமல் வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. இந்த கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 3,276,087 நிலுவை மீதியை அறவிடுவதற்கு காணப்பட்டதுடன் உரிய பிரகாரம் கடை வாடகை செலுத்தாமை தொடர்பாக வாடகை உடன்படிக்கையின் 6 ஆம் பந்தியில் ஈ பிரிவில் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளுக்காக புதிய மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் புதிய மதிப்பீடு கிடைக்கப் பெற்றதுடன் புதிய மதிப்பீடு கிடைக்கப் பெற்ற உடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்து புதிய உடன்படிக்கை கைச்சாத்திடும் போது நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடைகளைக் கால ரீதியில் மதிப்பீடு செய்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டி இருந்ததுடன் வாடகைப் பணத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மதுரங்குளி புதிய சந்தைத் தொகுதியில் இலக்கம் 03 மற்றும் 04 கடைகளுக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக் காலம் 2023 யூலை 09 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை இலக்கம் 03 மற்றும் 04 இற்கான வாடகையாளர்களுடன் விரைவாக புதிய உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படுகின்ற வாராந்த சந்தைகள், கடைகள், நூலகங்கள், முன்பள்ளிப் பாடசாலைகள், சிறுவர் பூங்காக்கள், பொது குழாய் கிணறுகள் அமைந்துள்ள காணி மற்றும் மயான நிலங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என்பன அமைந்துள்ள 112 காணிகள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் யாவும் சபைக்கு கையேற்பதற்காக தற்போது அளவிடல் கட்டளை மற்றும் அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் அந்த காணிப் பகுதிளை கையேற்பதற்காக தேவையான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பபட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 ஏக்கர் அளவிலான 06 காணி கூறுகளுக்காக சபையின் பெயரில் சின்னக்கடை உரித்துறுதி காணப்பட்ட போதும் காணி பௌதீக ரீதியில் இனங்காண்பதற்கு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி மெய்மையாய்வுச் சபைக்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்து இந்த காணிப் பகுதிகளை இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சபை ஆதனங்களின் உரித்து மற்றும் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மற்றும் பராமரிக்கப்படுகின்ற காணிகள் தொடர்பாக சபையின் பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை நலிவடைந்ததன் காரணமாக 03 காணிகளில் வெளித்தரப்பினரால் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதுரங்குளி வாராந்த சந்தைக் காணியில் அனுமதியற்ற நிர்மானம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக தற்போது உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பாலாவி பொது மலசல கூடத்துடன் உள்ள காணி மற்றும் முந்தளம் பொது மலசலகூடத்துடன் உள்ள காணி இது வரை சபைக்கு கையளிக்கப்படாது இருந்தமையால் கையேற்கப்பட்ட பின்னர் உரிய அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் இரண்டாம் தரத்தில் 06 பதவிகளும், ஆரம்ப தரத்தில் 05 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப தரத்தில் 02 பதவிகள் மிகையாகக் காணப்பட்டது. பிரதேச சபையில் காணப்பட்ட ஊழியர் வெற்றிடங்களின் காரணமாக ஆரம்ப தரத்தின் ஊழியர்கள் தமது உள்ளபடியான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக இரண்டாம் தரத்தின் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இரண்டாம் தரத்தில் பதவிகளின் வெற்றிடங்களின் கடமைகளை மேவுகை செய்வதற்காக ஆரம்ப தரத்தின் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பதவி வெற்றிடங்களை நிரப்பி சபையின் பணிகளை முறையாக நடாத்திச் செல்வதற்கும், மிகையான பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 413,671 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை செலுத்தும் போது அதற்காக பிணையாளர்கள் முன்வந்திருப்பார்களாயின் மேற்கூறப்பட்ட தொகை அறவிடுவதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கில் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 38 பணிகள் ஆண்டில் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 17,265,000 நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கி திட்டமிடப்பட்டிருந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டங்களின் அளவொன்று உரிய ஆண்டில் பெய்த அதிக மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக அமுல்படுத்த முடியாதிருந்தது. | ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட பணிகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சபையினால் 2024 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 17 இற்காக 38 இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் 11 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 25,875,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மிகுதி 06 நோக்கங்களுக்காக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |